# March 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இஸ்ரேல் அணு ஆராய்ச்சி மையம் இருக்கும் பகுதி அருகே ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதில் ஏராளமானோர் பலத்த காயமடைந் தனர். இந்தத் தாக்குதலால் இஸ்ரேலில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

(i) மத்திய கிழக்கில் இஸ்ரேலிடம் மட்டுமே அணு ஆயுதம் இருப்பதாக நம்பப்படுகிறது. இதை இஸ்ரேல் இதுவரை மறுக்கவும் இல்லை, உறுதி செய்யவும் இல்லை. இந்நிலையில், ஈரானின் நடான்ஸ் பகுதியில் உள்ள அந்த நாட்டின் அணுசக்தி மையம் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், இதை இஸ்ரேல் மறுத்துள்ளது. போரின் ஆரம்பகட்டத்தில் இங்கு அமெரிக்கா முதலில் தாக்குதல் நடத்தியது. அந்த நாடும், இந்தத் தாக்குதல் குறித்து கருத்து தெரிவிக்கவில்லை.

(ii) இந்நிலையில், நடான்ஸ் அணு சக்தி மையம் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேலின் அணு ஆராய்ச்சி மையம் அருகே உள்ள டிமோனா, அராத் நகரங்கள் மீது ஈரான் பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை வீசி இரவு தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணைகளை இஸ்ரேலின் வான் பாது காப்பு அமைப்பால் இடைமறிக்க முடியவில்லை எனக் கூறப்படுகிறது. இதுபோல இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பை ஊடுருவி ஈரானின் ஏவுகணைகள் அங்கு தாக்குதல் நடத்தியிருப்பது இதுவே முதல் முறை எனவும் கூறப்படுகிறது.

2.கிண்டி சிறுவர் பூங்காவில் பறவைக் காய்ச்சலால் 40-க்கும் மேற்பட்ட பறவைகள் உயிரிழந்த நிலையில், தீவிர தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக காய்ச்சல் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(i) சென்னை கிண்டியில் சுமார் 22 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள கிண்டி சிறுவர் பூங்காவில் வேடந்தாங்கல், வண்டலூர் உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் பறவைகள் பராமரிக்கப்படுகின்றன. குறிப்பாக கரண்டிவாயன், வண்ண நாரை, வெள்ளை அரிவாள்மூக்கன், சாம்பல் வங்காள கழுகு உள்ளிட்ட 10 வகையான 200-க்கும் மேற்பட்ட பறவைகள் உள்ளன.

(ii) இந்த நிலையில், கடந்த மார்ச் 13- ஆம் தேதி முதல் சிறுவர் பூங்காவின் பராமரிப்பில் உள்ள பறவைகள் தொடர்ச்சியாக உயிரிழந்தன. இதுவரை 40-க்கும் மேற்பட்ட பறவைகள் உயிரிழந்துள்ளன.

(iii) இதையடுத்து உயிரிழந்த பறவைகளின் மாதிரிகள் போபாலில் உள்ள தேசிய உயர் பாதுகாப்பு விலங்கு நோய்கள் (என்ஐஎச்எஸ் ஏடி) நிறுவனத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டன.

(iv) அதில் உயிரிழந்த பறவைகள் 'எச்5என்1' வகை பறவைக் காய்ச்சல் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, மார்ச் 20-ஆம் தேதி முதல் பூங்கா தேதி குறிப்பிடாமல் தற்காலிகமாக மூடப்பட்டது.

(v) முன்னதாக, கடந்த பிப்ரவரி மாதத்தில் சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இதே 'எச்5என்1' வகை பறவைக் காய்ச்சலின் தாக்கத்தால் காகங்கள் ஆங்காங்கே கொத்துக் கொத்தாக உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

3. இலங்கையில் பெட்ரோல், டீசல் விலையை அந்நாட்டு அரசு 25 சதவீதம் உயர்த்தியுள்ளது.

(i) ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா நடத்திவரும் தாக்குதலுக்குப் பதிலடியாக ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து ஹோர்முஸ் நீரிணை வழியாக கச்சா எண்ணெய் கப்பல்கள் வருவது பாதிக்கப்பட்டுள்ளது. இந்த காரணத்தால் பல நாடுகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்த்தப்பட்டுள்ளது.

(ii) இந்நிலையில், இலங்கையில் பெட்ரோல், டீசல் விலையை 25 சதவீதம் அந்நாட்டு அரசு உயர்த்தியுள்ளது. அதன்படி ஒரு லிட்டர் பெட்ரோல் விலை இலங்கை ரூபாய் மதிப்பில் ரூ.317-இல் இருந்து ரூ.398-ஆக அதிகரித்துள்ளது. ஒரு லிட்டர் டீசல் விலை இலங்கை ரூபாய் மதிப்பில் ரூ.79 உயர்ந்து ரூ.382- ஆக அதிகரித்துள்ளது. மண் ணெண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.195-இல் இருந்து

ரூ.255-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(iii) இலங்கையில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டு இருப்பது, கடந்த ஒரு வாரத்தில் இது இரண்டாவது முறையாகும். அண்மையில் பெட்ரோல், டீசல் விலை 8 சதவீதம் அதிகரிக்கப்பட்டது.

4. கடந்த 1971- ஆம் ஆண்டில் வங்கதேச ஹிந்துக்களுக்கு எதிராக பாகிஸ்தான் ராணுவம் புரிந்த அட்டூழியங்களை போர்க் குற்றங்கள் அல்லது இனப் படுகொலையாக அறிவிக்கக் கோரி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(i) 1947-ஆண்டில் ஆங்கிலேயரிடம் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது. அப்போது நாடு இந்ததியா, பாகிஸ்தான் என தனித்தனியாகப் பிரிக்கப்பட்டது. பாகிஸ்தான் கட்டுப்பாட்டின்கீழ் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகள் சென்றன. அதன்படி, தற்போதைய வங்கதேசமும் பாகிஸ்தான் வசம் சென்றது. அக்காலகட்டத்தில் அப்பகுதி கிழக்கு பாகிஸ்தான் என அழைக்கப்பட்டது.

(ii) ஆனால், பாகிஸ்தான் ஆட்சியாளர்களின் கொடுமைகளால் வெறுப்படைந்த கிழக்கு பாகிஸ்தான் (தற்போதைய வங்கதேசம்) மக்கள், முஜிபுர் ரஹ்மான் தலைமையில் கிளர்ந்தெழுந்து ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் உள்நாட்டுப் போர் மூண்டது. இதில் வங்கதேசத்தை இந்தியா ஆதரித்தது. இதைத் தொடர்ந்து, 1971- ஆம் ஆண்டில் நடந்த போரில் இந்தியாவால் பாகிஸ்தான் தோற்கடிக்கப்பட்டு, சுதந்திர வங்கதேசம் உருவானது.

(iii) அக்காலகட்டத்தில், கிழக்கு பாகிஸ்தானில் (தற்போதைய வங்கதேசம்) ஹிந்துக்களை தேடிப்பிடித்து பாகிஸ்தான் ராணுவம் படுகொலை செய்தது. இந்த சம்பவங்களை சுட்டிக்காட்டி, அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த எம்.பி. கிரேக் லேண்ட்ஸ்மேன் என்பவர் தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:

- 1971-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் தேதி பாகிஸ்தான் அரசால் ஷேக் முஜிபுர் ரஹ்மான் கைது செய்யப்பட்டார். பாகிஸ்தான் ராணுவமும், ஜமாத்-ஏ-இஸ்லாமி சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்ட பழைமைவாத இஸ்லாமிய குழுக்களாலும், கிழக்கு பாகிஸ்தான் முழுவதும் 'ஆபரேஷன் சர்ச்லைட்' என்ற பெயரில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு, அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

5. ஸ்பெயினின் நடைபெற்ற சர்வதேச பாரா பாட்மின்டன் போட்டியில் இந்திய வீரர் பிரமோத் பகத், 2 தங்கம், 1 வெள்ளிப் பதக்கங்கள் வென்று அசத்தினார்.

6. இந்தியாவில் யூரியா ஆலைகளுக்கு 50 சதவீதத்துக்கும் குறைவாகவே எரிவாயு விநியோகிக்கப்படுவதாக அந்தத் தொழில் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) மேற்கு ஆசிய போர்ப் பதற்றத்தால் ஹோர்முஸ் நீரிணை வழியாக திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) விநியோகம் தடைபட்டுள்ள சூழலில் யூரியா ஆலைகள் இயங்குவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(ii) இதுகுறித்து அந்த வட்டாரங்கள் கூறியதாவது:

- ஹோர்முஸ் நீரிணையில் சரக்குக் கப்பல் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதால் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட எல்என்ஜி விநியோகம் தடைபட்டது.
- இதனால் இந்தியாவின் மிகப்பெரும் எல்என்ஜி முனையத்தைக் கையாளும் பெட்ரோநெட் நிறுவனம் தவிர்க்க முடியாத சூழல் உருவாகியதாக அறிவித்தது.
- இதன் காரணமாக யூரியா உள்ளிட்ட உர ஆலைகளுக்கு விநியோகிக்கப்படும் எரிவாயுவை அரசின் பொதுத் துறை நிறுவனங்களான இந்திய எரிவாயு நிறுவனம் (கெயில்), இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐஓசி) மற்றும் பாரத் பெட்ரோலியம் நிறுவனம் (பிபிசிஎல்) ஆகியவை குறைக்கத் தொடங்கின.
- வழக்கமான விநியோகத்துக்கு மாறாக 60-65 சதவீதம்வரை மட்டுமே எரிவாயு வழங்கப்பட்டது. சில யூரியா ஆலைகளுக்கு 50 சதவீதத்துக்கும் குறைவான எல்என்ஜி

மட்டுமே விநியோகிக்கப்படுகிறது.

- குறைவான எரிவாயுவுடன் இயங்கும் ஆலைகளில் யூரியா உற்பத்தி 50 சதவீதம் வரை குறைந்துள்ளது. ஆனால் இந்த ஆலைகளின் எரிசக்தி நுகர்வு 40 சதவீதம் அதிகரித்திருத்துள்ளது. குறைவான யூரியாவை உற்பத்தி செய்ய அதிக ஆற்றல் பயன்படுத்தப்படுவது நேரடியாகவே நிதிச் சுமையை அதிகரிக்கும். இந்தச் சூழலில் ஆலைகள் இயக்கப்பட்டால் அங்கு பணிபுரிவோருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படவும் வாய்ப்புள்ளது என்றனர்.
- உலக அளவில் யூரியாவை அதிகம் நுகரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. எனவே உரத் தட்டுப்பாடு ஏற்பட்டால் வரவுள்ள காரீஃப் பருவ சாகுபடி காலத்தில் இந்தியா பெருமளவில் பாதிக்கப்படும்.
- மார்ச் 19-ஆம் தேதி நிலவரப்படி இந்தியாவிடம் 61.14 லட்சம் டன் யூரியா கையிருப்பில் உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் யூரியா கையிருப்பு 55.22 லட்சம் டன்னாக இருந்தது.

7. அமெரிக்காவில் இருந்து 16,714 மெட்ரிக் டன் எல்பிஜி (திரவ பெட்ரோலிய எரிவாயு) பைக்சிஸ் பயோனியர் சரக்கு கப்பலில் இந்தியாவுக்கு வந்தது.

(i) அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி புறப்பட்ட இந்தக் கப்பல், கர்நாடக மாநிலம் நியூ மங்களூரு துறைமுகத்துக்கு வந்தடைந்தது. மேற்காசிய போரால் இந்தியாவில் எல்பிஜி விநியோகத்தில் பிரச்னை எழுந்துள்ள நிலையில் அமெரிக்காவில் இருந்து வந்துள்ள எல்பிஜி, பிரச்னைக்கு தீர்வு காண்பதில் முக்கியப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) மங்களூரு நகரில் பூமிக்கு அடியில் நாட்டிலேயே மிகப்பெரிய எரிவாயு சேமிப்பு மையம் உள்ளது. கடந்த 2025 செப்டம்பர் முதல் செயல்பட்டுவரும் இந்த மையத்தில் 80,000 மெட்ரிக் டன் அளவுக்கு எரிவாயு சேமிக்க முடியும். கடல்மட்டத்தில் இருந்து 225 மீட்டர் ஆழத்தில் இந்த சேமிப்பு மையம் உள்ளது.

(iii) முன்னதாக, ரஷியாவில் இருந்து அக்வா டைட்டன் கப்பலில் 7.7 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் மங்களூருக்கு வந்தடைந்தது. இந்தக் கப்பலில் உள்ள கச்சா எண்ணெய் முதலில் சீனாவுக்கு செல்வதாக இருந்தது. எனினும், இந்தியாவின் தேவையைக் கருத்தில் கொண்டு நமது நாட்டுக்குத் திருப்பிவிடப்பட்டது. மங்களூரில் பெரிய அளவிலான பெட்ரோலிய சுத்திகரிப்பு மையமும் உள்ளது.

8. குஜராத் முதல்வர் மற்றும் நாட்டின் பிரதமராக ஞாயிற்றுக்கிழமையுடன் பிரதமர் நரேந்திர மோடி 8,931 நாள்களை நிறைவு செய்தார்.

(i) இதன்மூலம் சிக்கிம் முன்னாள் முதல்வர் பவன் குமார் சாம்லிங்கின் சாதனையை (8,930 நாள்கள்) விஞ்சி, நாட்டில் நீண்ட காலம் பதவி வகித்த அரசின் தலைவர் என்ற வரலாற்றுப் பெருமையை எட்டியுள்ளார் பிரதமர் மோடி.

(ii) குஜராத் முதல்வராக கடந்த 2001, அக்டோபர் 7-ஆம் தேதி பதவியேற்ற மோடி, 2014, மே 26-இல் நாட்டின் பிரதமராகும் வரை அந்தப் பதவியில் நீடித்தார்.

9. காசநோய் (TB) - இந்நோயின் வரலாறு, இந்தியாவில் அதன் தாக்கம், மற்றும் அதன் பரவலைக் குறைக்க எடுக்கப்பட்ட குறிப்பிட்ட சட்ட மற்றும் மருத்துவ நடவடிக்கைகள் குறித்த ஒரு விரிவான கண்ணோட்டம்.

(i) வரலாற்று மற்றும் மருத்துவப் பின்னணி

- 19 ஆம் நூற்றாண்டில் காசநோய் மிகவும் கொடிய நோய்களில் ஒன்றாக இருந்தது; இதற்கு ஒரு மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, இது அதிக இறப்பு விகிதங்களை ஏற்படுத்தியது.
- மைக்கோபாக்டீரியம் டியூபர்குலோசிஸ் என்ற பாக்டீரியாவை ராபர்ட் கோச் என்பவர் மார்ச் 24 அன்று கண்டுபிடித்தார். இந்தத் தேதி இப்போது ஆண்டுதோறும் உலக காசநோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

- காசநோய் என்பது காற்றில் பரவும் ஒரு நோயாகும். இது முதன்மையாக நுரையீரலைப் பாதித்தாலும், நகங்கள் மற்றும் முடியைத் தவிர மனித உடலின் எந்தப் பகுதியையும் தாக்கக்கூடும்.
- பாதிக்கப்பட்ட ஒருவரின் ஒரு இருமல் 3,000 நீர்த்துளிகளையும், ஒரு தும்மல் 4,000 நீர்த்துளிகளையும் வெளியிடக்கூடும். இது அருகில் உள்ளவர்களுக்கு எளிதில் பரவ வழிவகுக்கிறது.

(ii) சிகிச்சை மற்றும் உள்கட்டமைப்பின் காலவரிசைப்படியான பரிணாம வளர்ச்சி

- 1928-ல், காசநோய் நிபுணரும் மகாத்மா காந்தியின் கூட்டாளியுமான டாக்டர் சி. முத்து, சென்னையின் தாம்பரத்தில் 12 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையை நிறுவினார். இந்த மருத்துவமனை வளர்ந்து தாம்பரம் சானடோரியமாக (அரசு மார்பக மருத்துவமனை) மாறியது. தற்போது இது 750 படுக்கைகளைக் கொண்டுள்ளதுடன், ஆசியாவின் மிகப்பெரிய காசநோய் சிகிச்சை மையமாகவும் திகழ்கிறது.
- 1950-களில், காசநோய் சிகிச்சை பொதுவாக இரண்டு ஆண்டுகள் நீடித்தது.
- 1962-ல், காசநோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதில் கவனம் செலுத்தும் முதல் தேசிய காசநோய் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.
- 1997-ல், நோயாளிகள் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மருந்துகளை எடுத்துக்கொள்வதை உறுதிசெய்யும் DOTS (நேரடியாகக் கண்காணிக்கப்படும் குறுகிய கால சிகிச்சை) உத்தியைச் செயல்படுத்தும் வகையில் தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டது.
- 2020-ல், இத்திட்டம் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் எனப் பெயர் மாற்றப்பட்டு, முழுமையாக ஒழிக்கும் இறுதி இலக்குடன் மறுவடிவமைக்கப்பட்டது.
- அறிவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், வழக்கமான சிகிச்சைக் காலத்தை இரண்டு ஆண்டுகளில் இருந்து வெறும் 168 நாட்களாகக் குறைத்துள்ளன.

(iii) குறைப்பு மற்றும் ஆதரவிற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள்

- ஆரம்பகாலப் பரிசோதனை: பாதிக்கப்பட்ட நபருடன் வசிக்கும் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும், 'அறிகுறியற்ற' தொற்றுகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக, அரசாங்கம் இப்போது காசநோய் பரிசோதனைகளை மேற்கொள்கிறது.
- நிதியுதவி: காசநோய் சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளிக்கும், அவர்களின் ஊட்டச்சத்துத் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், மாதந்தோறும் ₹1,000 நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகிறது.
- நிக்ஷய் மித்ரா திட்டம் (Nikshay Mitra Scheme): தனிநபர்களோ அல்லது அமைப்புகளோ காசநோய் (TB) நோயாளிகளை "தத்தெடுத்து", அவர்களின் சிகிச்சை காலம் முழுவதும் அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்து சத்துணவுகளை வழங்க இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது.
- பாதுகாப்பு நடவடிக்கைகள்: காசநோயை உண்டாக்கும் பாக்டீரியாக்கள் மேலும் பரவாமல் தடுக்க, நோய்த்தொற்றுக்கு ஆளானவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது.

(iv) புள்ளிவிவர ரீதியான முன்னேற்றம் (2015–2024)

கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் காசநோய் தொடர்பான அளவீடுகளில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டுள்ளது:

- இறப்பு விகிதம்: 2015-ஆம் ஆண்டில், காசநோய் இறப்பு விகிதம் ஒரு லட்சம் மக்கள் தொகையில் 28 ஆக இருந்தது; 2024-ஆம் ஆண்டிற்குள், இது ஒரு லட்சத்திற்கு 21 ஆகக் குறைந்தது.
- நோய்த்தொற்று விகிதம்: 2015-ஆம் ஆண்டில், நோய்த்தொற்று பாதிப்பு விகிதம் ஒரு லட்சத்திற்கு 237 ஆக இருந்தது; 2024-ஆம் ஆண்டிற்குள், ஒரு லட்சத்திற்கு 187 நபர்கள் மட்டுமே நோய்த்தொற்றுக்கு ஆளானவர்களாகக் கண்டறியப்பட்டனர்.
- தற்போதைய நிலை: 2025-ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் மொத்தம் 26,34,185 நபர்கள் காசநோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா போலியோ நோயை வெற்றிகரமாக ஒழித்தது போலவே, தொடர் கண்காணிப்பு மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு வாயிலாக ஒரு "காசநோய் இல்லாத இந்தியாவை" உருவாக்க அரசாங்கம் தற்போது முழு கவனம் செலுத்தி வருகிறது